# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்
## 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018

**டாக்டர்.மு.ராஜேந்திரன், இ. ஆ. ப.,**
**ஆணையர்**


ந.க. எண். : 6740/ 2018/கூ.தே.1 நாள்:15.09.2018

**<u>தேர்தல் திட்டம்</u>**
**<u>(Communication of Election Programme)</u>**

(1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52(5) (a)–ன் கீழ்)

***

1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்டு, 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52 மற்றும் 53 ல் விவரித்தபடி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு, சட்டப்பிரிவு 33(11) மற்றும் விதி எண். 52–A-ன் படி, அதிகாரப்படுத்தப்பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், (இனி ஆணையம் எனப்படும்) மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டாம் கட்டத்தில் (Phase II) வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த உள்ளது.

இரண்டாம் கட்டத்திற்கான (Phase II) சங்கங்களின் வகைகள் (இணைப்பு–1), அவற்றின் எண்ணிக்கை (இணைப்பு–2), தேர்தல் நடத்தப்படவேண்டிய சங்கங்களின் பட்டியல் (இணைப்பு–3), தேர்தல் திட்டம் (இணைப்பு–4) இத்துடன் தரப்பட்டுள்ளன.

2. **<u>மாநில தேர்தல் அலுவலர்கள் (State Election Officers) :</u>**
   1) இத்தேர்தல் திட்டத்தை தொடர்புடைய சங்கங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவித்துவிடவும்,
   2) விதி 52–A(3)–ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்களை நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. **<u>மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) :</u>**
   1) விதி எண். 52(6)(a) ன் படி வேட்புமனு தாக்கல், பரிசீலனை, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை போன்ற இனங்களுக்கான இடத்தை தேர்தல் அறிவிப்பில் (Election Notice ) குறிப்பிட்டு தேர்தல் அறிவிப்பை வழங்கிடவும்,

...2

2) நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களுக்கு விதி எண். 52 (1 )(c)–ன் படி வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer), விதி எண். 52 (3 )(a)–ன் படி தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரை நியமித்திடவும், தலைவர் / துணைத்தலைவர் (Office Bearers) தேர்தலுக்கு விதி எண். 53(1 )(a) தேர்தல் அலுவர் நியமித்திடவும்,

3) விதி எண். 52–A(4)–ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்கள் நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

4. <u>இத்தேர்தல் திட்டம் தொடர்புடைய சங்கங்கள் :</u>

இச்சங்கங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சட்டப்பூர்வ கடமைகளை விதி எண். 52 (19)–ல் சொல்லப்பட்டபடியும், இதர வகையிலும், குறிப்பாக விதி எண். 52 (6)(d), (6)(e), (7)(a), (7)(c) மற்றும் (10)(a)-ன் படியும் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றன.

இணைப்பு: மேற்கண்டவாறு

ஒம்./–
ஆணையர்

ஆணையருக்காக

15/9/18

பெறுநர் :

1. சமூக நலத்துறை இயக்குநர் / மாநில தேர்தல் அலுவலர்
2. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
3. இணைப்பில் உள்ள சங்கங்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலமாக

} தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் ( மின்னஞ்சல் மூலம்)

நகல் :

1. தலைமைச் செயலர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
2. அரசு முதன்மை செயலர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
3. அரசு முதன்மை செயலர்,
   சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, சென்னை – 9
4. காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை – 4
5. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
6. அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்
7. அனைத்து தேர்தல் பார்வையாளர்கள்

} தகவலுக்காக ( மின்னஞ்சல் மூலம்)

# இணைப்பு – 1

<u>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18</u>

## கூட்டுறவு தேர்தல் 2018 – இரண்டாம் கட்டம்

### கூட்டுறவு தேர்தல் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத்திற்கான சங்கங்களின் விவரம்

**கட்டம் II** : கூட்டுறவு விற்பனை சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய சங்கங்கள்

**197**

# இணைப்பு – 2

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

## கூட்டுறவு தேர்தல் 2018 – இரண்டாம் கட்டம்

கூட்டுறவு தேர்தல் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத்திற்கான சங்கங்களின் விவரம்

| வ. எண் | மாநில தேர்தல் அலுவலர் | தேர்தல் நடைபெற வேண்டிய கூட்டுறவு சங்கங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் | 113 |
| 2 | இயக்குநர் பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | 17 |
| 3 | மீன்வளத்துறை இயக்குநர் | 12 |
| 4 | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 20 |
| 5 | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 8 |
| 6 | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | 10 |
| 7 | சமூக நலத்துறை இயக்குநர் | 1 |
| 8 | சர்க்கரைத் துறை இயக்குநர் | 16 |
| | மொத்தம் | 197 |

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

தேர்தல் திட்டம் 2018 (இரண்டாம் கட்டம்)

(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 )- ன் கீழ்)

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 19.09.2018 |
| 2. | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 24.09.2018 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 24.09.2018 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 25.09.2018 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 25.09.2018 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 27.09.2018 நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 03.10.2018 நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 03.10.2018 நேரம் : 5 பி.ப |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 06.10.2018 நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 08.10.2018 நேரம் : 11 மு.ப முதல் 4 பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 08.10.2018 நேரம் : 5 பி.ப |
| 12. | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 09.10.2018 நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 09.10.2018 நேரம் : 5 பி.ப |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 11.10.2018 நேரம் : 8 மு.ப முதல் 5 பி.ப |
| 15. | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 12.10.2018 நேரம் : 10 மு.ப முதல் |
| 16. | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் | 12.10.2018 (நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன்) |
| 17 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | 16.10.2018 நேரம் : 10 மு.ப முதல் |

ஆணையர்

Scanned by CamScanner

## Tamil Nadu State Co-operative Societies Election Commission, Chennai - 18.

### Performa

| Sl. N | Name of the Society with Reg. No. | Region / Circle | Ful Postal Address | Contact No. | Date of Last Election | Date of Expire of 5 year term | No. of Vacancies to be filled by Election ( to be in conformity with section 33(1)(a)(2)(a) and (3) of the TNCS Act 1983) | | | | Total no of Members as on date | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Women | SC/ ST | General | Total | Individual | Delegate |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 1 | Chennai Women's cottage Industries cantral coop. Society LID-x-231 | Channai Region | No:41 Basant Avenue Avvai Home complex Adayar Channai-20 | 044-24901729 | 06/06/2013 | 05/06/2018 | Women-9 | Sc/St-2 | General-7 | Total-9 | Individual-17 | Delegate-15 |